www.tamilarangam.net

நம்பிக்கை
சர்வதேச வெளியீடு
நம்பிக்கை
NAMBIKKAI
International

பகுதி 2 இல. 12 ஜூலை-ஓகஸ்ட் 2001

# வெளி நாட்டு இலங்கையர்கள் கோடை விடுமுறையை யாழ் குடாநாட்டில் களிப்பதில் ஆர்வம்

## கொழும்பு-யாழ் விமானச் சேவையுடன் கப்பல் சேவையும்

இவ் வருட கோடை விடுமுறையை தாயகம் சென்று யாழ் குடாநாட்டில் தமது உற்றார் உறவினர்களுடன் களிக்கவிரும்பும் வெளி நாடுகளில் வசிக்கும் இலங்கையரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் செல்வதற்காகத் தேவையான அறிமுகப் பத்திரங்களை (Clearance Certficate) பெற்றுக்கொள்வதற்கு இலங்கைத் துாதரகங்களுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை சென்ற மாதங்களில் அதிகரித்திருந்ததாகவும் இது தொடர்பான ஆவனங்களை உடனுக்கு உடன் பெக்ஸ் மூலம் பாதுகாப்பு அமைச்சின் யாழ்ப்பாணப் பயணிகள் தொடர்பான பனிமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் ஐரோப்பா நாடுகளில் அமைந்துள்ள இலங்கைத் துாதரகங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

கொழும்பு-யாழ்ப்பாணம் விமானச் சேவைகளை நடாத்திவரும் ஸ்ரீ லங்கா விமானப் படை அதிகாரிகள் அளித்த தகவல்களின்படி விமானச் சேவைகள் வழமைபோல் நடைபெறுவதாகவும் அதிக பயணிகள் ஒரே சமயத்தில் விமான ஆசனங்களை பதிவு செய்திருப்பதால் ஆசனங்கள் வளங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டிருப்பதாக அறியக்கூடியதாக உள்ளது. விடுமுறையைக் களிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து வந்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் கடல் மார்கமாகவும் யாழ்ப்பாணம் செல்வதற்கு வசதிகள் ஏற்படுத்தி இருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. சொந்த நாட்டில் பிறந்த ஊரில் உற்றார் உறவினர்களுடன் விடுமுறையைக் களிப்பது எவ்வளவு ஆனந்தம் ! உல்லாசமான விடுமுறைக்கான எமது வாழ்துகள்.



வெண்நிறச் சீருடை அணிந்து புன்னகையுடன் பள்ளிக்குச் செல்லும் சிறுமிகளைப் படத்தில் காணப்படுகிறது. திறைமையும் ஆற்றலும் பிறப்புரிமையாகக் கொண்ட இவர்களின் அபிலாஷை அமைதியைத் தவிர வேறு என்ன?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**• காரைதீவு**

காரைதீவு சண்முக வித்தியாலயத்தில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. வித்தியாலய அதிபர் வே. ஜெயநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம அதிதியாக வட-கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் உதவிப் பணிப்பாளர் எஸ். எதிர்மானசிங்கம் கலந்துகொண்டார்.

**• யாழ்ப்பாணம்**

யாழ் சென்ற ஜோன்ஸ் கல்லூரியின் பரிசளிப்பு விழா பல நிகழ்ச்சிகளுடன் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பற்பல கலை சகல விஞ்ஞானபீட அதிபர் பேராசிரியர் கி. குமாரவடிவேல் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

**• தெல்லிப்பளை**

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கு தெல்லிப்பளை சந்திஊடாக பஸ் சேவையொன்று நடத்தும்படி அப்பிரதேச மக்கள் கேட்டுக்கொண்டனர். தற்பொழுது சுன்னாகம், அளவெட்டி, அம்பனை ஊடாகவே மகாஜனக் கல்லூரிக்கு பஸ் சேவைகள் நடைபெறுகிறது.

**• வட்டுக்கோட்டை**

கல்வியில் ஆர்வமிக்க மாணவர்களுக்கு ஊக்கிவிப்பு கொடுப்பனவு வளங்கும் நிகழ்ச்சி மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றது. கனடா நாட்டிற்கு புலம் பெயர்ந்து சென்ற மாதகல் கிராமத்தினர் தமது பிறந்த கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு வளங்கிவரும் ஊக்கிவிப்பு கொடுப்பனவுகளை சண்டிலிப்பாய் கல்விப் பணிப்பாளரினால் வினியோகிக்கப்பட்டது. சொந்த மண்ணை மறக்காத கனடாவாழ் மாதகல் மக்களுக்கு அவர் நன்றி கூறினார்.

**• கரவெட்டி**

கரணவாய் அண்ணா சிலையடி வள்ளுவர் சனசமூக நிலையத்திற்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தை கரவெட்டி பிரதேசசபை செயலாளர் அவர்கள் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். பருத்துத்துறை சேமிப்பு வங்கியின் ஆதரவில் நிர்மான வேலைகள் நடைபெற்றுள்ளது.

**• பருத்தித்துறை**

பருத்தித்துறை பிரதேச சபை வடமாராட்சி கிழக்கில் 3 சந்தைகள் நிர்மாணிக்க 4 லட்சத்தி 50 ஆயிரம் ருபா ஒதுக்கப்பட்டுள்ளது. மணற்காடு, பெற்பதி, குடத்தனை ஆகிய இடங்களில் இச்சந்தைகள் நிர்மாணிக்கப்பட உள்ளன.

**• தெல்லிப்பளை**

தெல்லிப்பளை கலை இலக்கியவெளியீட்டுக் கல்விப் பணிப்பாளரும் எழுத்தாளருமாகிய கோகிலா மகேந்திரன் எழுதிய விஞ்ஞான கதைகள் என்ற நூல் வெளியீட்டுவிழா கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், சைவ புலவர் க.செல்லத்துரை விழாவின் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

## வட-கிழக்கில் க.பொ.த. பரீட்சையில் தமிழ் மொழி சித்தியில் வீழ்ச்சி

### தமிழ்த் தின விழாவில் வடகிழக்கு கல்வி அமைச்சுச் செயலாளர் அதிருப்தி

திருகோணாமலை புனித மேரி கல்லூரியில் நிகழ்ந்த தமிழ்த்தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வ-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. கே. பரமேஸ்வரன் ஆற்றிய உரையில் "...தமிழ் மொழி மூலம் கல்வி பயிலும் வட-கிழக்கு மாகாண மாணவர்களில் 10 வீதமான மாணவர்கள் 1998 முதல் க.பொ.த தமிழ் பாடத்தில் சித்தியடையத் தவறியிருக்கிறார்கள். வட-கிழக்கு மாணவர்களில் தொடர்ந்தும் இந்த வீழ்ச்சி காணப்படுகிறது. ஆசிரியர்களும் பாடசாலை அதிபர்களும் தாய் மொழி கற்பிப்பது தொடர்பாக அதிக கவனமும் அக்கறையும் கொள்ளவேண்டும்..." என்று எடுத்துரைத்துள்ளார்.

தமிழ்த் தின விழாவில் தொடர்ந்தும் உரையாற்றிய திரு. பரமேஸ்வரன் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் தமிழ் மாணவர்களின் நிலை மிக மோசமாக இருப்பதாக கூறியுள்ளார். சில பிரதேசங்களில் கட்டடங்கள் இல்லாததால் கொட்டில்களிலும், மர நிழல்களிலும் வகுப்புகள் நடை பெறுகின்றன. மின்சார வசதிகள் இல்லாது கை விளக்கில் படிக்கும் சூழ்நிலை வன்னிப் பிரதேசம், பருவான்கரை, மற்றும் ஈச்சிலம் பாதை ஆகிய பிரதேச மாணவர்குளுக்கு ஏற்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார். யாழ் மாவட்டத்திலிருந்து அம்பாறை மாவட்டம் வரையுள்ள கல்வி வலயங்களின் மாணவர்கள் தமிழ்த் தின விழாவில் பல நிகழ்ச்சிகளிலும் போட்டிகளிலும் கலந்து கொண்டனர். "City of Trinco" பயணிகள் கப்பல் மூலம் மாணவர்கள் விழாவிற்கு வந்தடைவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## ஊரெங்கும் திருவிழா

வரலாற்றுப் புகழ்மிக்க ஆவரங்கால் சிவன் கோவில் வருடாந்த மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சப்பர உற்சவம், இரதோற்சவம், தீர்தோற்சவம் ஆகிய திருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. திருநெல்வேலி பழங்கிணற்றடிப் பிள்ளையார் ஆலயத்தின் உள் வீதி மண்டபம், ஆலயத் திருவீதிகள் சிறந்த முறையில் புனருத்தாரணம் செய்ததைத் தொடர்ந்து மகா கும்பாபிஷேகப் பெருவிழா சிறந்த முறையில் நடைபெற்றது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் ஆடி மாதம் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினகள் உற்சவம் நடை பெற்று வருகின்றது. ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விசேட நிதியை பயன்படுத்தி கடந்த யுத்த கால அனார்த்தங்களின் போது சேதமடைந்த பகுதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் வருடாந்த மகோற்சவம் ஆனி 12 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்தும் திருவிழாக்கள் நடைபெற்று இரதோற்சவம், தீர்த்தம், பூங்காவனம் போன்ற உற்சவங்கள் நடைபெற்றுள்ளன.

குடா நாட்டில் பிரசித்திபெற்ற கோவில்களாகிய நல்லூர் கந்தசுவாமி, தொண்டமனாறு செல்வச் சந்நிதி, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆகிய கோவில்களின் வருடோற்சவங்களும் சிறப்பாக நடத்துவதற்கு அரசு மற்றும், மக்கள் அமைப்புகள் ஏற்பாடுகள் செய்து வருகிறது.

பாரிஸ் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தின் திருவிழா ஆவணி மாதம் 20 ஆம் தேதி ஆரம்பமாக உள்ளது.

## சர்வ மத அமைதி தூதுக் குழு யாழ் விஜயம்

பௌத்தஇ இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மற்றும் ஆங்கிலிக்கன் சபை ஆகிய சகல சமயங்களைச் சேர்ந்த மதகுருமார்களை உள்ளடக்கிய அமைதித் தூதுக் குழுவினர் ஆணிமாத இறுதியில் வட குடா நாட்டிற்கு அமைதிச் செய்தியை எடுத்துச் சென்றனர்.

மேன்மைதாங்கிய இந்த அமைதிக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் சகல மதத் தலைவர்களையும், பொது மக்களையும் சந்தித்து தென் பகுதியில் வசிக்கும் மக்கள் அமைதியைக் காண்பதில் மிகவும் ஆவலுடன் இருப்பதையும் வடக்கு தெற்கு மக்களுக்கிடையில் கலந்து உரையாடல்கள் ஏற்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தனர். தேசிய ஒருகினைப்பு அலுவல்கள் தொடர்பான அமைச்சின் செயலாளர் பேராசிரியர் காமினி கீரவெல்ல இந்த விஜயத்தை பற்றி மேலும் குறிப்பிடுகையில் கச்சேரியில் இடம்பெற்ற கூட்டத்தின் போது யாழ் மதத் தலைவர்களையும் உளளடக்கிய அமைதி கமிட்டியொன்று நிறுவப்பட்டதாகத் தெரிவித்தார்.அமைச்சின் வடக்கு-தெற்கு பரிமாறல் திட்டத்தின் கீழ் இந்த விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டிறுந்தது.

## மடு சர்வ மத அமைதி யாத்திரையில் எல்.ரீ.ரீ.ஈ. யினருடன் சந்திப்பு

கொழும்பு ஆயர் இல்லத்தினால் மடு தேவஸ்தலத்தை நோக்கிய அமைதி யாத்திரையொன்று ஓகஸ்ட் மாதத்தில் "செத் சரண" அமைப்பின் இயக்குனர் வணக்கத்துக்குறிய தந்தை பெஸில் விக்கிரமசிங்கா ஒழுங்கு செய்துள்ளார். ஆயர் இல்லத்தால் இதுவே முதல் தடைவையாக அமைதி யாத்திரையொன்று ஒழுங்குச் செய்திருப்பதுடன் இந்த யாத்திரையின் போது எல்.ரீ.ரீ.ஈ. யினரை சந்தித்து அமைதி முன்னெடுப்புகளைபட பற்றி பேசவிருப்பதாக தந்தை பெஸில் விக்கிரமசிங்கா பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க மற்றும் ஏனைய மதகுருக்களுக்கு எல்.ரீ.ரீ.ஈ. யினருடன் தமது சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக கறுத்துகளை பரிமரிக்கோள்ள இந்த அமைதி யாத்திரை அரிய சந்தர்பத்தை ஏற்படுத்தும் என்று நம்பப் படுகிறது. மது தேவஸ்தலத்தின் சமய வழிபாடுகளில் கலந்துகொண்ட பின்பு அப்பிரதேசத்திலுள்ள அகதி முகாம்களில் வசிப்பவர்களை சந்திக்கவிருப்பதாகவும் வன்னிப் பிரதேசங்களில் வசிப்பவர்களின் நிலைகளை கண்டறியவும் இந்த யாத்திரை காலத்தில் திட்மிட்டு இருப்பதாக தெரிவித்த பயண அமைப்பாளாகள் ஏனைய பிரதெச மக்களுக்கு அங்கு நிலைகளை அறிய சந்தற்பததை இதனால் ஏற்படும் எனவும் மேலும் தெரிவித்தனர்.

எல்.ரீ.ரீ.ஈ. யினருக்கும் இநத அமைதி யாத்திரியாளர்களை சந்தித்து பேசி அமைதித் திட்டங்களைப் பற்றி கறுத்துக்களைப் பரிமாறிக்கொள்ள இது ஒரு அரியசந்தர்ப்பமாக அமையும் என்று மேலும் நம்பப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஐக்கியநாடுகள் சபையின் பயங்கரவாத நிதி சேகரிப்பை ஒழித்துக் கட்டும் உடன்படிக்கைக்கு சுவீஸ் அரசின் அங்கீகாரம்

ஐ.நா. வில் நிறைவேற்றப்பட்ட சர்வதேச உடன்படிக்கையை அங்கீகரிக்க சுவிஸ் சமஸ்டி ஆலோசனைச் சபை மே மாதம் 16 ஆம் திகதி மேற்கொண்ட முடிவையடுத்து சுவிஸ் அரசு மேற்படி சர்வதேச உடன் படிக்கையில் கைசாத்திட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக பயங்கரவாதத்தை எதிர்ப்புப் போராட்டங்களுக்கு வலுவூட்டும் முயற்சியாக சுவிஷ்லாந்து இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக சுவிஸ் நாட்டு வெளிவிவகார அதிகார சபை ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. நிதி சேகரிப்பு தடை நடவடிக்கைகளை திட்டமிடவும், சர்வதேச நிதி கடத்தலை செயலிழக்கச் செய்யவும் சர்வதேச ரீதியாக கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த உடன் படிக்கையில் வசதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன் படிக்கை 1999 டிசெம்பர் மாதம் ஐ.நா.ச.யில் நிறைவேற்றப்பட்டதுடன் இதன் சட்ட நகல்களை வரைவதில் ஸ்ரீ லங்கா மேற்கத்திய நாடுகளுடன் முக்கிய பங்காற்றியது. 2001 டிசம்பர் 31 திகதி வரை இந்த உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு அவகாசம் வழங்கப்பட்டிருப்பதுடன் இதுவரை 42 நாடுகள் இந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டு பயங்கரவாத நிதி சேகரிப்பை ஒழித்துக்கட்டும் செயற்பாடுகளுக்கு தமது பங்களிப்பை அளித்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில் தகவல் நுட்பவியல் நிலையம்

வட, கிழக்கு மாகாண புனர்நிர்மான மீளக்குடியமர்வு அமைச்சரினால் தகவல் நுட்பவியல் நிலையமொன்று சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இன்று அதிக கிராக்கியுள்ள நவீன நுன் அறிவியலில் இன்றியமையாத தகவல் நுட்பவியல்த் துறையில் யாழ்ப்பாணத்து மக்களை பின்னடைய விட முடியாது என்று மேற்படி அங்குரார்ப்பண விழாவில் அமைச்சர் கூறியுள்ளார்.

இத் தகவல் நுட்பவியல் நிலையம் (e-mail) மின்னஞ்சல், இடைவலைப் பின்னல் (Internet) வசதிகளுடன் ஐம்பது கணணிகளைக் கொண்டுள்ளது. மேலதிகமாகக் குடா நாட்டில் ஏனைய பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள நிலையங்களில் (Information Technologie Park) I.T.P. குறைந்த செலவில் கணணிப் பயிற்சிகள் பெற்றுக்கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் இப் பயிற்சிகளைப் பெறுவதில் இளைஞர்களும், யுவதிகளும் மிக ஆர்வம் கொண்டுள்ளனர். முற்றிலும் மாறுபட்ட உயர்தர வசதிகளை ஏற்படுத்தும் இந்த I.T.P. நிலையங்கள் யாழ் குடாநாட்டு மக்களுக்கு உலக மாற்றங்களுக்கு இணையான அறிவைப் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தும். அத்துடன் உலகெங்கும் வாழும் தமது உறவினர் நண்பர்களுடன் மின் அஞ்சல் (e-mail) மூலம் தொடர்பு கொள்ளும் வசதியும் யாழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## அகில இலங்கை போர் பயிற்சி மாணவர் வெற்றிக் கிண்ணத்தை திருகோணமலை மாவட்டம் கைபற்றியது



தென் இலங்கை காலி மாவட்டத்தில் அமைந்துள்ள லபுதுவ ஸ்ரீ தம்ம தேசிய பாடசாலையில் ஒகஸ்ட் 5ம் திகதி முதல் ஐந்து நாட்களாக புனித ஜோன்ஸ் மருத்துவ வண்டிச் சங்கம் (St. John Ambulance Association) ஸ்ரீ லங்கா படைவகுப்பு பணியகத்துடன் இணைந்து நிகழ்த்திய போர் பயிற்சி மாணவர் முகாமில் (Cadet Camp) திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, புனித ஜோசப் கல்லூரி, ஸ்ரீசண்முக இந்து மகளிர் கல்லூரி மற்றும் புனித மேரி மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த Cadet அணியினர் 2001 வருடத்திற்கான 4 வெற்றிக் கிண்ணங்களையும் வென்றெடுத்தனர்.

காலி, கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை, கம்பஹா, குருணாகல, பதுளை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த போர் பயிற்ச்சி மாணவர் குழுக்களைச் சேர்ந்த 450 மாணவர்கள் இந்த Cadet பயிற்சி யில் கலந்துகொண்டனர்.

சென்ற வருட வெற்றிக் கிண்ணத்தை யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த போர் பயிற்சி மாணவர் அணியினர் வென்றெடுத்தனர்.

வெற்றியீட்டிய திருகோணமலை அணியினரையும் வெற்றிக் கேடயங்களையும் படத்தில் காண்க.

# நம்பிக்கை

சர்வதேச வெளியீடு

### பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் சர்வதேச முன்னெடுப்புகள்

எல்.ரீ.ரீ.ஈ. மீதான சர்வதேச அழுத்தங்கள் 2001 வருடத்தில் குறிப்பிடத்தக்களவு மேலோங்கியுள்ளது. பயங்கரவாதச் சட்டமூலம் 2000 (Terrorism Act 2000) எனப்படும் புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டமூலத்தின் கீழ் பிரித்தானியாவை தளமாகக்கொண்டு பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி திரட்டும், ஆதரவளிக்கும் 21 பயங்கரவாத அமைப்புகளை அடையாளம்கண்டு அவற்றை செயலிழக்கச் செய்ய பிரித்தானியா அரசு இவ் வருடத்தில் மார்ச் மாதம் நடவடிக்கை மேற்கொண்டது.

எல்.ரீ.ரீ.ஈ. யின் பிரசார மற்றும் இயக்க நடவடிக்கைகளின் முக்கிய தளங்கள் பிரான்ஸ், பிரித்தானியாவில் அமைந்திருப்பதால் இத் தடை விதித்தல்கள் முக்கியத்துவம் பெறும். பிரான்ஸ் பிரித்தானியாவிற்கு அடுத்து எல்.ரீ.ரீ.ஈ. யின் இரண்டாவது முக்கிய தளமாகக் கருதப்படுகிறது. பிரான்ஸ் அரசினால் சட்ட நகல்களைத் தயாரித்து ஐ. நா. சபைக்கு முன்வைத்த சர்வதேச பயங்கரவாத நிதி சேகரிப்பு ஒழிப்பு உடன்படிக்கையை 1998 வருடத்திலிருந்து பயங்கரவாத நிதி சேகரிப்பு, கடத்தல் மற்றும் சகல பயங்கரவாத நிதி நடவடிக்கைகளைத் தடை செய்யும் சட்டமூலமாக சர்வதேச ரீதியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இலங்கை இந்த சர்வதேச உடன்படிக்கையை தயாரிக்கும் நடவடிக்கைகளில் பிரான்ஸ் தரப்பினருடன் இணைந்து முக்கிய பங்காற்றியது.

எல்.ரீ.ரீ.ஈ. ஏற்கனவே அமெரிக்கா, இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமொன்றாகும். மேற்கத்திய மற்றும் கனடா ஆகிய நாடுகளின் எல்.ரீ.ரீ.ஈ. யினரின் செயற்பாடுகள் தொடர்பாக இப் புதிய நடைமுறைகள் சர்வதேச பிரஜைகள் பயங்கரவாதத்தின் உண்மை நிலையை புரிந்துள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது.

நாட்டின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் இரத்தப் பெருக்குகளை ஏற்படுத்தும் போராட்டங்களை வலுவூட்டுவதற்காக கனடா, அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, மற்றும் கிழக்கு ஆசியா நாடுகளில் இருந்து எல்.ரீ.ரீ.ஈ. யினருக்கு நிதி வசதிகள் கிடைக்கப்பெறுகிறது. யுத்தம் நடைபெறும் இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலும், மேற்கத்திய நாடுகளிலும் சுகபோகங்களுடன் வாழும் தமிழ் அமைதிப் பிரியர்கள் தங்களுக்கு வதிவிடம் வழங்கிய நாடுகளிலிருந்து தாயகத்தின் இரத்தப் பெருக்குகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை வலுவூட்டும் நிதிப் பெருக்குகளைப் பற்றி சற்றுக் கூட அவதானிப்பதில்லை.

இன்றைய இக்கட்டான, அபாயகரமான சூழ் நிலையில் கட்சி வேற்றுமைகள், கருத்து வேறுபாடுகள் மறந்து தர்க்க ரீதியாக சிந்தித்தல் வேண்டும். அரசு, எதிர்க்கட்சி, மக்கள் அமைப்புகள் தமது அரசியல் செயற்பாடுகளை எல்.ரீ.ரீ.ஈ. நடவடிக்கைகளின் மீது உறுதியாக ஈடுபடுத்தல் வேண்டும். அந்த ஈடுபாடுகள் எவ்வாறாக இருப்பினும் அவை அரசியல் ஈடுபாடுகளாகவே இருத்தல் வேண்டும். எல்.ரீ.ரீ.ஈ. பங்குகொள்ளாத எந்த ஒரு சமாதான முன்னெடுப்புகளும் எதிர் காலத்தில் சமாதானத்தை ஏற்படுத்துமென்று நம்பிக்கை கொள்வது சாத்தியமல்ல. இப் பிரச்சனை தீர்ப்பதில் அரச தரப்பினர் நோர்வேயின் அனுசரனையுடன் மேற்கொண்ட சமாதான முன்னெடுப்புகளை மறுபரிசீலனை செய்யவேண்டும். சமாதானத்துக்கான அடுத்த நடவடிக்கையாக பகைமையைத் தவிர்க்கும் அன்னியொன்னிய உடன்படிக்கைகளின் முலம் ஒரு யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தும் அவசியத்தை வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் வலியுறித்தியுள்ளார்.

எது எவ்வாறாயினும் இச் சந்தர்ப்பத்தில் அமைதியும் பொருதார சீர்குலைவும் மிக முக்கிய கவனத்திற்குள்ளாக வேண்டும். அதேசமயம் பயங்கரவாதத்திற்கான சர்வதேச ஆதரவைத் துண்டித்துவிட சர்வதேச பிரைஜைகள் மீதான அழுத்தத்தை தீவிரப் படுத்தல் வேண்டும்.

**பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம் பார்த்து உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.**

**-அதிகாரம் 49- காலம் அறிதல்**


பிறர் செய்த தீங்கை எண்ணிக் கோபம் கொள்ளாமல் அத்தீங்கு செய்தோரை வெல்வதற்கு ஏற்ற காலத்தை மனதில் எண்ணிக் காத்திருப்போர் அறிவுடையோர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழ் ஊடகச் சுதந்திரம் அபாயத்தில்



வெளி நாடுகளிலும் இலங்கையிலும் பிரசுரிக்கப்படும் தமிழ் வெளியீடுகளின் ஊடகச் சுதந்திரத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் கொலை பயமுறுத்தல்களும் வினியோகத் தடைகளும் மற்றும் பலவித இடையூறுகளும் எல்.ரி.ரி. யினரின் முன்னணி அமைப்புகளினால் மேற்கொண்டு வருவதாக கனடா இங்கிலாந்து மற்றும் இலங்கையிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடாவில் வெளிவரும் "மஞ்சரி" வார இதழ் பயங்கரவாதிகளின் பல இன்னல்களுக்கு உள்ளாகி வருவதாகவும் அந்தத் தமிழ்ப் பிரசுரம் வெளியிடுவது நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கனடா செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்கிலாந்தில் மற்றுமொரு தமிழ் வெளியீடென்றாகிய "வான்முரசு" வார இதழுக்கு இதே நிலையை எதிர்நோக்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் பிரசுரிப்பாளர்கள் கொலை பயமுறுத்தல்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் இலண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் வெளிவரும் தமிழ் வாசகர்களின் நன்மதிப்பை பெற்ற "அமுது" மாத குடும்பச் சஞ்சிகை இதைவிட சற்றுமாறான நிலையை எதிர் நோக்கியுள்ளது. "அமுது" மாத சஞ்சிகையொன்றில் வெளிவந்துள்ள சுதந்திர மாற்றுக் கருத்துக்களை சகிக்க முடியாத எல்.ரி.ரி. யினரின் முன்னணி அமைப்புகளினால் அச் சஞ்சிகைப் பிரதிகளை தீயிட்டு எரிக்கப்பட்டதாக யாழ்ப்பாணச் செய்திகள் கூறுகின்றன.

பேச்சுச் சுதந்திரம், எழுதச் சுதந்திரம், செயல் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் பெற்றுக்கொள்ளவும், பாதுகாத்துக் கொள்ளவும் போராடும் உலகில் தமிழ் வெளியீடுகளுக்கு இந்த நிலையா ? பயங்கரவாதத்தினால் சுதந்திரச் சிந்தனைகளைத் தடுக்க முடியுமா ?

"அமுது" சம்பவத்தைத் தொடர்ந்து வன்னி வாலிபர் ஒருவர் (ஆனை விழுந்தான், முருகண்டி) "அமுது" ஆசிரியருக்கு இவ்வாறு எழுதியுள்ளனர். **"...யாழ் பல்கலைகழகத்திலுள்ள வன்னி மாணவர்கள் "அமுது" வை தீயிட்டு கொழுத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றனர். அவர்கள் பாக்கிய சாலிகள். ஏனென்றால் "அமுது" வாசிக்க மட்டுமல்ல அவர்களுக்கு எரிக்கவும் சுதந்திரமுண்டு. ஆனால் வன்னியில் எமக்கு எதையும் படிக்கவே சுதந்திரம் இல்லாமல் இருக்கிறதே ! என்று மாறும் இந்த அடிமை நிலை..."**.




## "சரோஜா" 2000 ஆண்டில் சாதனை படைத்த சினிமாப் படைப்பு

சென்ற ஆண்டில் திரையிடப்பட்டு தொடர்ந்தும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் சிங்கள, தமிழ் சினிமா இரசிகர்களின் அமோக வரவேற்புக்குள்ளாகிய "சரோஜா" 2000 ஆண்டில் பல துறைகளில் சாதனை படைத்துள்ளது.

யுதத்தினால் தன் குடும்பத்தை இழந்த ஒரு தமிழ்ச் சிறுமியினதும் மற்றும் ஒரு சிங்கள கிராமத்துப் பள்ளி ஆசிரியர் ஒருவரின் சிறுமியினதும் உணர்ச்சிவசமான கதைதான் ""சரோஜா". இத் திரைப்படம் சிங்கள-தமிழ் மக்களின் ஒற்றுமையை வற்புறுத்திக் கூறியிருப்பது பாராட்ட வேண்டிய விடயமாகும். சிங்கள-தமிழ் சினிமா இரசிகர்கள் தம் பிள்ளைகளுடன் சென்று இத் திரைப் படத்தைப் பார்த்து மகிழ்ந்தனர்.

"சரோஜா" பல சர்வதேச விருதுகள் பெற்றிருப்பதுடன் இவற்றுள் ஆசிய திரைப்பட இரசிகர் விருது (Netpac), கேரள சர்வதேச திரைப்பட விழா, சிங்கப்பூர் சர்வதேச திரைப்பட விழா, பிரான்ஸ் திரைப்பட விழா ஆகிய சர்வதேச திரைப்பட விழாக்களில் பெற்ற விருதுகளும், பாராட்டுகளும் மிகமுக்கியமானவையாகும்.

ரேணுகா பாலசூரிய தயாரித்து சோமரட்ன திஸாநாயக இயக்கிய "சரோஜா" ஐரோப்பாவில் பல நாடுகளில் திரையிடப்பட்டது.

## நெடுந்தீவில் தீவிர அபிவிருத்தித் திட்டங்கள்

வடக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புனரமைப்புத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் நெடுந்தீவு அபிவிருத்திக்கான பாரிய நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

நெடுந்தீவு மின்சார வினியோக விஸ்தரிப்புக்காக ரூபா 40 லட்சமும், பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்படும் குமாரசாமி உடையார் சதுக்கத்தில் அமைந்துள்ள டக்ளஸ் தேவானந்தா கலாச்சார மண்டபத்தின் இறுதிக்கட்டப் பூர்த்திகளுக்கென ரூபா 30 லட்சமும், வைத்தியசாலை புனரமைப்புப் பொருட்கள் கொள்வனவுக்காக ரூபா 5 லட்சமும், வழங்கப்பட்டுள்ளது.

இவை உட்பட ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இந்த ஆண்டில் ரூபா 2 கோடியே 87 லட்சம் நெடுந்தீவுக்கென வழங்கப்பட்டுள்ளது.

***தவிர்க்க முடியாத காரணங்களினால் சில மாதங்களாக "நம்பிக்கை" வெளியிட முடியாமையையிட்டு வருந்துகிறோம். நன்றி.***

சகல விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**"NAMBIKKAI" International**
Ambassade de Sri Lanka - 15 rue d'Astorg - 75008 Paris - FRANCE - e-m@il : nambikkai@ifrance.com

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்